14,138
COIMBATORE.
14138

இந்தி எதிர்ப்பு பாடல்கள்.

பாரதிதாசன்,
K. M. பாலசுப்பிரமணியம் முதலிய
பலதோழர்களால் பாடப்பட்டவை.

ARTHUR HOPE POLYTECHNIC
1 APR 1945
COIMBATORE

ஈரோடு
இந்தி எதிர்ப்பு பதிப்பகத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது.

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

1937

விலை அணா 2.

7 Pol 9—42
G.
U. M.
6425
ARTHUR HOPE PO...
1 APR 1945
COIMBATORE

ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள்.

எஸ். சிவப்பிரகாசம்.

(ஞானப்பண்டித மோதிலால் என்ற மெட்டு)

பல்லவி

...ந்தமிழ் மாந்தரே! விழித்தெழுவீர்! (வீரத்)

அனுபல்லவி

...ற நெஞ்சினர்கள் ஹிந்தி மொழியைப்பரப்ப
...த்திடும் சூழ்ச்சி கண்டிரோ — இனிமைத் தமிழ்
...ந்திடும் சூழ்ச்சி கண்டிரோ

தோகையரா

வி...மற்ற ஹிந்தியால் தமிழ் நாட்டிற்கேது பயன்?
தமிழரே உறக்கம் விடுவீர்!
...மொழிக்கே பங்கம் நேர்ந்திடில் உம் வாழ்வு
தகர்ந்திடும்! இதை யறிவீர்!

ஆரமுதாம் இன்பத் தமிழை நம் முன்னோர்கள்
அன்புடன் காத்து வந்தார்;
அதை இன்றழிப்பதற்கே பார்ப்பனர்கள் முயல்கின்
அக்ரமம் இது வல்லவோ? [றார்

பாட்டு

தீரமுடன் அதை எதிர்ப்பீர்! சிறந்த தமிழை வளர்ப்பீர்!
தீயர்கள் எண்ணம் ஒழிப்பீர்! ஜெகம்புகழும் (வீரத்)

தோகையரா

தமிழரின் வாழ்வுக்குப் பங்கம் நேர்ந்திட்ட அன்று
சகித்ததைக் கண்டதுண்டோ?
தன்னுயிரைத் துரும்பென மதிப்பதன்றோ சான்று
சரித்திரம் கூறுமன்றோ?
அமுதமொழி யழிந்திட்டால் ஆரியர்க்கு நாமடிமை!
நம் மானம் அழிவதன்றோ?
அன்புசெய் கவரிமான் ஒரு ரோமம் இழந்தாலும்
ஆருயிர் இழக்குமன்றோ?

பாட்டு

ஆண்மையுடனே எதிர்ப்பீர் மாண்புடைய தமிழர்களே!
அஞ்சாமல் மானங் கொள்ளுவீர்! — ஹிந்தி மொழியை
அழித்து, நல் வாழ்வு கொள்ளுவீர்! (வீரத்)

பால்சுந்தர ராஜ்.

G. D. NAIDU, U. M. S. COIMBATORE
ARTHUR HOPE POLYTECHNIC LIBRARY
1 APR 1945
COIMBATORE

(தேயிலைத் தோட்டத்திலே என்ற மெட்டு)

செந்தமிழ் நாட்டினிலே—கல்விச்
செல்வக்களஞ்சியம் கொள்ளையில் போகுதே—
(செந்)

இந்தியாவிலனேக—ஆண்டு
ஆயிரங்கட்குமுன் அமைந்த களஞ்சியம்
சந்ததம் மெஞ்ஞானம்—ஊட்டும்
சாத்திரங்கள் பல வாய்த்த களஞ்சியம்
வந்திடும் ஆங்கிலர்க்கும்—ஜப்பான்
அமெரிக்கர்க்கும் கடன் தந்த களஞ்சியம்
தந்திரப்பார்ப்பனரின்—கையில்
சிக்கிச்சிதைவுற்று சீர்கெடப் போகுதே—(செந்)

வள்ளுவர்காளமேகம்—ஒட்டக்
கூத்தர் ஒளவையை வளர்த்த களஞ்சியம்
தெள்ளுதமிழ் நக்கீரன்—புக
ழேந்தி தொல் காப்பியன் பிறந்த களஞ்சியம்
(முத்) தொள்ளாயிரம் ஐந்தொகை—திருக்
குறள் ஞானபோதம் நிறைந்த களஞ்சியம்
அள்ளக் குறையாத—தமிழ்
அன்னையின் செல்வங்கள் மண்ணாகப் போகுதே
(செந்)

'பிராகிருதம்' சிதைந்து—வட
பாகத்திருந்தது டில்லியில் மொகலாயர்
அரசாட்சியில் 'பார்சி'—யுடன்
அரபிகலந்து உருதாச்சு அவைபின்பு
பிரிந்து சமஸ்கிருதம்—சேர்ந்து
பிறந்த ஹிந்தியதில் 'கிழக்கிந்தி' 'மேற்கிந்தி'
பெருகும் 'மைதிலி' 'அவதி'—எனப்
பல ஹிந்திக் கூட்டம் தமிழைக் கொள்ளை
யாடுதே (செந்)

இறந்திறந்து பிறக்கும்—அற்ப
ஹிந்தி திருடியை செந்தமிழ்க் களஞ்சிய
பொருளைக் கொள்ளையடிக்க—பெரும்
பொய்சொல்லி நுழைக்கிற காங்கரஸ் பார்ப்பனப்
புரட்டை யொழித்திடவே—தமிழ்ப்
பண்டிதர், பாவலர், யாவரும் வாருங்கள்!
பரிவுடன் பாசுராஜ்—கீதம்
பாடித்தமிழ்த் தாயைப் பாதுகாத்திடுவோம்—
(செந்)

———

(வளையற் சிந்து மெட்டு)

பாரிலெங்கும் புகழ்பெருகும் பைந்தமிழ் நற்பாஷை-இந்த
பாரதத்திலோர் சிறிய பாகம் ஹிந்தி பாஷை

எழுத படிக்க சொல்ல கேட்க இனிய தமிழ் பாஷை
இசையில்லாது வலியப்பேசும் ஹிந்தி தடிப் பாஷை

அகில தேயத்தார் புகழும் அருமைத் தமிழ் பாஷை-வட
ஆரியர் தென்பார்ப்பனர்கள் போற்றும் ஹிந்தி பாஷை

G. D. NAIDU,
U. M. S. COIMBATORE.

ஆயிரக்கணக்கில் ஆண்டு கண்ட தமிழ் பாஷை—வருடம்
அற்ப நூறுகண்டதொரு ஆர்ய ஹிந்தி பாஷை

ஏழுகோடி மக்கள் பேசும் இன்ப தமிழ் பாஷை
இடையிடையே திருத்தி சிலர் பேசும் ஹிந்தி பாஷை

ஆதிமுதல் தனித்தியங்கும் ஆசைத் தமிழ் பாஷை
'அரபி' 'உர்து' 'சமஸ்கிருதம்' கலந்த ஹிந்தி பாஷை

'தேவர்ரம்' 'திருவாசகம்' தந்த தமிழ் பாஷை—ஆர்ய
தலைவன் ராமன் கதையை யிங்கு அளக்கும் ஹிந்தி
பாஷை

அன்பே தெய்வமென்ற உண்மை அறிந்த தமிழ்ப்
பாஷை—சிறு
அரசன் ராமனைக் கடவுள் என்னும் ஹிந்திபாஷை

பேதமின்றி மாந்தர் வாழ பிறந்த தமிழ் பாஷை—ஜாதி
பிரித்து வைக்கும் சமஸ்கிருத ஆர்ய ஹிந்தி பாஷை

அறிவாராய்ச்சி ஞானம் கலையூட்டும் தமிழ்பாஷை-நமை
அடிமையாய் ஆழ்த்திவைக்கும் அந்தோ ஹிந்தி பாஷை

எவரும் படித்தறிய மிக எளிது தமிழ் பாஷை—என்
றென்றும் பார்ப்பனர்க்கு மட்டும் எளிது ஹிந்தி பாஷை

அகில உலகத்துயர்ந்த அரிய தமிழ் பாஷை-இந்தி
யாவிலோர் பிரிவில் பல சிதைவு ஹிந்தி பாஷை

பாசுராஜ கீதம் போற்றும் பண்பு தமிழ் பாஷை—சிறு
பாலரைக் கஷ்டப்படுத்துமையா ஹிந்தி பாஷை.

———

1 APR 1945

கடம்பங்குளம் ப. நாராயணன்.

(நொண்டிச்சிந்து)

செந்தமிழ் நாட்டினரே!—தீயர்
சேர்க்கையால் நமக்குவந்த கேட்டினைப்பாரும்
நந்தமிழ் மொழியினையே—இங்கு
நாசஞ்செய்திடக் கருதிப் பார்ப்பனர்கள்
சொந்தமா யெழுத்தின்றி—வெறுஞ்
சோம்பேறி லம்பாடிகள் வசமிருக்கும்
ஹிந்தியைக் கட்டாயமாக—நாம்
ஏற்றுப்படிப்பதெனச் சட்டமுஞ் செய்ய

கச்சை வரிந்துகட்டி—புரோகித
கட்சியார் செய்யுமார்ப்பாட்ட மறிவீர்
அச்சமும் நாணமுமின்றி—நம்
அண்ணாத்தைகளுஞ் சேர்ந்தாடுகிறார்
இச்சுவை போதுமென்றே—நம்
ஈனவயிற்றுடன் பிறந்த மந்திரிமார்
பச்சையாய்ப் பார்ப்பனர் தாளை—இவர்
பற்றிப் பிடித்தணைக்குங் காட்சியைப்பாரீர்!

முப்பத்து ஐந்து கோடியில்—இன்று
மூன்று நான்குகோடிபேர் ஹிந்தி பேசுறார்
அப்பவும் ஒருமுகமில்லை—இவை
ஆங்காங்கு வேறுவேறாய்த் திரிந்தது

COIMBATORE
1 APR 1945

செப்பரியவங்கமும் ஐந்து—கோடி
சீரியரைக்கொண்டுமே திகழ்ந்து நிற்குது
ஒப்பிலாத் தமிழ்ப்பாஷை—அதோ
டொட்டியபாஷை யாறுகோடி பேரன்றோ.

அகில வுலகமெல்லாம்—செல்லும்
ஆங்கிலம் பொதுப்பாஷையாகாதோ
'இகபர' மிரண்டினுக்கும்—அதில்
இல்லாத நூல்கள் வேறெதிலுமுண்டோ?
சுகமுடன் பார்ப்பனர் வாழ—நாம்
சூத்திரராயிருந்தவர்க் கடிமை செய்ய
அகமதில் வடமொழிப் பொருள்—நமக்
காக்கிவைக்க வந்த அவர்சூழ்ச்சி யிதுவே.

ஆறு மாகாணங்களிலும்—இந்த
அய்யமாரே முதல்மந்திரி யாச்சே
வேறு மாகாணங்களிலே—இந்த
வீண் காரியஞ்செய்யும் ஆற்றலுண்டோ
யாரிதில் ஏமாளி யென்று—தமிழ்
அண்ணாத்தைகளை யேய்க்க வந்திருக்கிறார்
வீறுகொண் டெழுந்திருங்கள்—எந்த
விதத்திலும் தமிழ்மொழி காத்திடுவோம்.

திருநெல்வேலியிலிருந்து—புறப்படும்
தீதறுங் கூட்டமதில் சேர்ந்திடுங்கள்
பொருள்தன்னைப் பெற்றிருந்தால்—கொஞ்சம்
பொருள் கொடுத்தவர்களுக் குதவிடுங்கள்
தருமநெறி தெரிந்தவர்கள்—வாய்ச்சொல்
தந்திடுவீர் தமிழ்த் தொண்டினுக்கே
மருள்கொண்டு மஞ்சள் பெட்டிக்கே—ஓட்டளித்த
மாபாபந்தீரத் தமிழ் படித்திடுவீர்.

மேலப்பாளையம் த. நமச்சிவாயம்

(ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு)

கண்ணிகள்.

ஐயாவைதீகப் பெரியாரே—யான்
அறைந்திடும் மொழி கேட்பீரே
மெய்யான கொள்கை யறிவீரே—நீர்
மேன்மை நிலையடைவீரே.

ஹிந்தி பாஷையை கைக் கொள்ளாதீர்—இசை
தந்திடும் தமிழை வெறுக்காதீர்
தாய் பாஷை தமிழ் என்றறிவீரே—இதை
தலைமையாய் ஓங்கச் செய்வீரே. (ஐ)

சமதர்ம நல்வாழ்வு வேண்டும்—யாருக்கும்
சமத்துவ உரிமைகள் வேண்டும்
மதக்கொடுமை ஒழிய வேண்டும்—வைதீகம்
மாண்டு மறைந்திட வேண்டும். (ஐ)

தீண்டாமை என்ற பேச்சு—இங்கு
திகழ வேண்டுமென்ற ஏச்சு
மாண்டாருடன் பயணமாச்சு—உங்கள்
மானமும் வெளுத்திடலாச்சு. (ஐ)

நன்மை செய்வதாக ஓட்டுவாங்கி—நல்ல
நாகரிக காரில் உங்கள் பயணமாக்கி

G. D. NAIDU,
U. M. S. COIMBATORE.

பாதகமாகவோ அய்யோ!—சிலரை
பாழ்படச் செய்ததும் பொய்யோ. (ஐ)

ஹிந்தியை கண்டனம் செய்வோம்—நமது
இன்பத் தமிழை வந்தனம் செய்வோம்
நீதிநெறியை அறிவோம்—அந்த
நிலையில்லா ஹிந்தியை களைவோம். (ஐ)

நன்மைசெய்ய முன் வருவீரே—ஞாய
நல்வழியில் முன் செல்வீரே
நாட்டின் நலத்தை எண்ணுவீரே—நல்ல
நமசிவாயம் கவி உட்கொள்வீரே. (ஐ)

இராஜபாளையம் தங்கச்சாமி.

(மாயப் பிரபஞ்சத்திலானந்தம் வேறில்லை என்ற மெட்டு)

ஹிந்தி எதிர்ப்புக்கு ஏகுவோமே சென்னை,
சொந்தமான தமிழ் பாஷை காப்பாற்றிட

மந்திரி தன்னினத்தார் தனக்காக
தந்திரமாகவே சதி செய்யும் சூழ்ச்சி
நந்தமிழ்நாக ரீகத்தின் வீழ்ச்சி
அந்தணர் வாழ்வி னாதிக்க மொழிக்க
எந்தவிதமும் எதிர்த்திட வாரும்—இனி
சொந்தமான தமிழ்பாஷை காப்பாற்றிட (ஹிந்தி)

பட்டம் பதவிமோகப் பைத்தியம்கொண்டு
திட்டமும்செய்து திரித்தி யுரைத்து
சட்டமுமாக்கியோர் சாதியார்வாழ
கட்டாயப்பாடக் கப்டத்தைக்கொல்ல
தங்க சாமித்தமிழ் கீதம்பாடியே—நம்
சொந்தமான தமிழ்பாஷை காப்பாற்றிட (ஹிந்தி)

எம். பி. சாமி.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் என்ற மெட்டு)

இன்ப மணங்கமழும்—தமிழ் மொழி
எங்கு முழங்கிடவே
அன்பர் குழாங் களெல்லாம்—வீரங்கொண்டு
ஆற்றுவீர் தன் கடமை.

ஹிந்தி எனப் புகலும்—ஓர்சற்றும்
இன்பமிலா மொழியை
நந்தமிழ் மக்கள் கற்க—தமிழ் மொழி
நாசமுற முனைந்தார்.

கட்டாயம் தாய்மொழியே—கற்பித்திடல்
கடமை யாயிருக்க
கெட்டமதி மிகுந்து—ஹிந்தியைக்
கிட்டித் திடப்புகுந்தார்.

தாய் மொழிக் கல்வியிலும்—கல்லாமை
தாண்டவ மாடுகையில்
சேய்கள் கட்டாயம் கற்றல்—நீதியோ
செத்த பாஷைக் கலப்பை.

நூற்றுக்குப் பத்துப் பேரே—இன்று கல்வி
நுகர்ச்சி யடைந்திருக்க
வேற்றுருக் கொண்ட—சமஸ்கிருதந் தன்னை
ஏற்று நடப்போமோ.

பாரினில் பார்ப்பனர் தம்—முன்னேற்றம்
பலனுறவமைக்க
நேரிடில் ஹிந்தி கற்க—அவசியம்
நேருமென் வமைத்தார்.

பார்ப்பனர் சூழ்ச்சி பொங்கி—இன்று நம்மை
பாம்பாட் டாட்டுதலை
ஏற்பரோ மானமுள்ள—தமிழ் மகன்
என்று இசைப்பவர் தாம்.

தாய்க் கொலை! சால்புடைத்து—என்றியம்பும்
தன்மைபோல் பார்ப்பனர்கள்
ஏய்க்கப்புகுந்துவிட்டார்—நம்மவர்கள்
என்றும் சரண் புகவே.

சூத்திரர் என்று சொன்னார்—நம்மவரைத்
தூவெனத் தள்ளிவைத்தார்.

சாத்திரஞ் சொல்லிச் சொல்லி—மானங்கெட
தாழ்த்த மதி மிகுந்தார்.

மானமுள்ள தமிழன்—தாய்மொழி
மாண்பை யறிந்திருந்தும்
ஈனத்தனமாக—பார்ப்பனர்
இஷ்டத்திற் கொப்புவனோ?

தமிழர் சுதந்தரத்தை—காப்பதற்கு
சற்றேனும் வன்மையுண்டேல்
கமழும் தமிழினையே—கட்டாயம்
கற்கும் பாட மாக்க.

உயிரைக் கொடுத்தேனும்—அல்லது நம்
உடலைக் கொடுத்தேனும்
அயர்விலா ஆண்மையுடன்—ஆரியரின்
அட்டகாச மடங்க.

ஒன்று திரண்டெழுந்து—நமதின்ப
உயிரைத் தமிழ் மொழியை
கொன்று விடாமற் காப்போம்—தமிழ் மக்கள்
கொட்டுவீர் போர்முரசே.

சித்தந் தெளிகலைகள்—மிகுமின்பத்
தேனொத்த தாய் மொழியை
சுத்த ரெத்தமிருந்தால்—தமிழன்பர்
தோள் கொட்டிக் காத்திடுவீர்.

திண்டுக்கல் எம். ஆர். மத்திரன்.

(இலாவணி)

மாண்புறும் தோழர்களே!
வலிபெறும் தோழர்களே!
ஆண்மைத் தமிழர்களே வாரும் வாரும்—என்ன
அநியாயம் அக்கிரமம் பாரும் பாரும்.

மன்றத்தலைமையிலே
மந்திரி சபையிலே
பன்னிரு பேர்களிலே பாதி பாதி—இந்த
பார்ப்பனரிருக்க என்ன நீதி நீதி.

காங்கரஸ் மந்திரிகள்
கதர்வேஷத் தந்திரிகள்
தூங்குபவர்கள் தலை மேலே மேலே—கல்லை
தூக்கியும் போடுவது போலே போலே.

பொதுமொழி வேண்டுமென்று
புதுமொழி 'ஹிந்தி' கண்டு
மதுரத்தமிழைக் கொன்று ஐயோ ஐயோ—பழைய
மனுதர்ம ஆட்சிசெய்வர் பொய்யோ பொய்யோ.

கம்பன்புக ழேந்தி கற்ற
காளமேகன் தன்னைப்பெற்ற

செம்பொன்மொழி எங்கள் தமிழ் மாது மாது—
தனை
சீர்குலைக்கப் பார்ப்பனர்செய் சூது சூது.

பாவலரைப்பயந்த
பழந்தமிழ்த் தாய்க்கு வந்த
ஏவலாள் ஹிந்திப் பெண்ணென்றய்யே ஐயே—
நம்மை
ஏய்க்கிறார்கள் பார்ப்பனர்கள் மெய்யே மெய்யே.

இத்தமிழ் மொழியையும்
எழுதவும் படிக்கவும்
கற்றறியாதிருக்கும் போது போது—இன்னும்
கட்டாய 'ஹிந்தி' எதற் கோது ஓது?

எந்த மாகாணத்திலும்
இந்த மாகாணத்தைப் போல்
'ஹிந்தி'யைக் கட்டாயமாக்க வில்லை இல்லை-இது
எல்லாம் பிராமணர் செய் தொல்லை தொல்லை.

செந்தமிழ் மலையாளம்
தெலுங்கு துளுவம் கன்னடம்
ஐந்து மொழிவழங்கும் நாடு நாடு—இதற்கு
ஆரிய 'ஹிந்தி' தரும் கேடு கேடு.

'ஹிந்தி'யினை எதிர்ப்பீர்
இன்பத்தமிழ் படிப்பீர்
சிந்தை மகிழ்ந்திருப்பீர் நாளும் நாளும்—தமிழ்
சேயுன்மத்திரன் கவி கேளும் கேளும்.

புதுவை எஸ். சிவப்பிரகாசம்.

ARTHUR HOPE POLYTECHNIC LIBRARY
1 APR 1945
COIMBATORE

(ஏற்ற ராகத்தில் இசைத்துப்பாடுக)

எங்கும் மனக்கொதிப்பே—அடடா
இன்பத் தமிழ் நாட்டில்!
பொங்கும் உணர்ச்சியெலாம்—இங்கே
புத்துயிர் பெற்றதடா!
சங்கையற்ற பார்ப்பார்—தமிழைச்
சதிசெய நினைத்தார்
சிங்கம்போல் வீறுகொண்டார்—தமிழர்
செந்தமிழ் காப்பதற்கே!.

தஞ்சமடைந்திட்ட—மந்திரி
சபையினர் அன்று
வஞ்சக வார்த்தையினால்—''நன்மை
வாய்ந்திடும் நாட்டில்'' என்றார்
வெஞ்சுடர்த் தீயை இன்று—தமிழர்
வீடெங்கும் மூட்டி விட்டார்
மிஞ்சி எரியுதடா—தமிழர்
மேன்மையெலா மதிலே.

நல்ல தமிழர்குலம்—இதனால்
நாசமடைந்திடுமோ?

வெல்லுந் தமிழர்குலம்—மேலும்
வீழ்ச்சியடைந்திடுமோ?
எல்லையிலா வீரத்—தமிழர்
எலிக ளாவாரோ?
வல்லமை போய்விடுமோ?—அதுதான்
வாய்த்திடும் காலமிதே!

அலைகடல் பொங்கித்—தமிழை
அழிக்க வந்திடினும்,
மலையெல்லாம் புரண்டே—தமிழை
மாய்க்க வந்திடினும்,
பலமிகு மாசர்—தமிழைப்
பழித் தழித்திடினும்,
சலித்திடுவாரோ— தமிழர்
தாய்மொழி காப்பதற்கே?

"ஒன்று, தமிழ்தழைய—வேண்டும்
உற்ற தோர் இந்நாட்டில்!
அன்றேல் தமிழர்களின்—ஆவி
அழிந்திட வேண்டும்!"
என்ற முடிவடைந்தார்—அடடா
இந்த உணர்ச்சியினைச்
சென்றழிப்ப தெதுவோ?—தமிழர்
தீவிரம் பின் அறிவார்!

———

ஆசிரியர் சி. கோவிந்தசாமி பிள்ளை.

———

(நொண்டிச்சிந்து)

இந்தியச் சோதரரே—இன்னும்
எத்தனைநாள் நித்திரையில் ஆழ்ந்திருப்பீர்!
அந்தணர் எனுஞ்சாதி—நம்மில்
அனைவர்க்கும் மேலெனவே அகந்தை கொண்டார்

அடிமையெனவே மதித்தார்—இன்றே
ஆட்டிவைக்கின்றாரே தங்கள்—நாட்டம்போலவே
கொடுமைகள் புரிய லானார்—நாமே
கூக்குரல் போட்டாலும் செவி சாய்க்கவேமாட்டார்

காங்கரஸ் நாமமதிலே—தேர்தல்
காலத்திலுறுதி கூறி ஜாலமே செய்தார்
ஆங்காங்கு கூட்டங்கூட்டினார்—நாமும்
அனைவரும் ஒன்றுகூடி துணைபுரிந்தோம்

சட்டசபை தன்னிற் புகுந்தார்—புதிய
சட்டங்கள் பலவியற்ற மனந்துணிந்தார்
திட்டமே வகுத்தனரே—இந்தத்
தேசமக்கள் ஆர்வமதை யோசியாமலே

தமிழன்னை தவித்திடவும்—நாமும்
தமிழர் எனும் புகழை அழித்திடவும்
அமிழ்தினுமினிய மொழி—என்றும்
ஆர்வமுடனே வளர்த்த—சீர் தமிழ்மொழி

பண்டைத்தமிழ் மொழியிதே—இந்தப்
பார்தோன்றிய காலம்முதல்—சீர்கொண்டமொழி
எண்டிசையும் போற்றிய மொழி—எதிர்
இணையிலாக் கம்பன் கூத்தன்— இசைத்தமொழி

கொலைபுரியவும் எண்ணினார்—தங்கள்
கூட்டத்தினர் மேலோங்கவும்—நாட்டமே
[கொண்டார்
தலைவர்களெனும் பேர்கொண்ட—இந்தத்
தான்றோன்றிகள் செய்கையிதை—சான்றோர்
[மதியார்

ஹிந்தியாம் மொழியைக்கொண்டு—நம்மை
எந்நாளும் அந்தகாரந் தன்னிலமிழ்த்த
இந்தியா முழுவதுவே—ஈதே
இணையிலாத் தனிமொழி—எனப்புகன்றார்

கட்டாய பாடமென—அவர்
காரியங் கைக்கொண்டிடவும் வீரியங்காட்டி
சட்டம் புகுத்தத் துணிந்தார்—இந்தச்
சங்கடந்தவிர்த்தாலன்றி—இங்கிதமுண்டோ

வீரமே கொண்டெழுவோம்—நாமும்
வேண்டிடா மொழியாம் ஹிந்தி—பூண்டொழியவே
தீரமாய்க் கிளர்ச்சிசெய்வோம்—தமிழ்த்
தேவியை அகங்குளிர—சேவையே செய்வோம்

(இந்தியச் சோதரரே)

குடியேற்றம் மு. அண்ணல் தங்கோ

(ஜெய பேரிகை கொட்டடா எ. இ. பா.)

பல்லவி.

ஹிந்தி ஏனையா! எமக்கு? எமக்கு? (ஹிந்தி)

பல்லவி மகுடம்.

தாய்த்தமிழ் எழுத்தறிவே பெற்றிலாதவர்களுக்கு
(ஹிந்தி)

சரணங்கள்.

மந்திரா லோசனை புரிந்தீர்!—வஞ்ச
மனுதர்மக் குழுவொடு கலந்தீர்!
தந்திரமாய்ப்பொது மொழிவழிகூறித்
தமிழைத்தொலைக்க முனைந்தீர்! முனைந்தீர்!!
(ஹிந்தி)

ஹிந்திக்கு இலக்கியம் உண்டா?—அது
எழுந்தது நேற்றா? பண்டா?
இந்தியா முழுவதும் பேசுதல் உருதன்றி
இடருள்ள ஹிந்திமொழி யல்லவே? சொல்லும்
(ஹிந்தி)

“காங்கரஸ்” என்னும்பேர் இங்கிலீஷ்!—அதைக்
காத்து வளர்த்த தெல்லாம் இங்கிலீஷ்!!
ஆங்கிலத் துணைகொண்டு அறிந்தோம்
பலகலைகள்!!!
ஆரிய! நன்றியில்லாக் காரியம் செய்தீர்! (ஹிந்தி)

பொது மொழி வாதம்பேசும் புலவீர்!—துளசிஇப்
புனை கதையை ஏனிதில் நுழைப்பீர்?
மதியாருமது முன்னோர் வளர்த்தும்-உயிரிழந்த
வடமொழி கற்க வாத மிடுதலெதற்கு? (ஹிந்தி)

தொடக்கக் கல்வியே இங்கில்லாது!—மக்கள்
தொழும்பராய்க் கிடக்கின்ற போது!
துடுக்குத் தனமா யிந்தி துரைத்தன மொழி
யென்று
தொல்லை வீளைப்பதெல்லாம் நல்லதல்ல!!
(ஹிந்தி)

வளமற்ற ஹிந்திமொழி பயின்று—சற்று
வருந்தமி ழாங்கிலங்கெட் டுழன்று!
அளப்பருங் காலம்வரை யறிவின்றிக் கொடிபிடித்
தடிமையாய்த் தமிழர்களை கிடக்கப்பண்ணீர்!!
(ஹிந்தி)

வடக்கே கட்டாயப்பாட மேது?—அதை
வங்காளிகள் எதிர்க்கும்போது?
மடத்தமிழர்களென்று மதித்துக் கட்டாயபாட
மாக்க முயற்சிப்பது யோக்யதையல்ல! (ஹிந்தி)

தேர்தல்காலத்தில் வந்த பணிவும்—சில!
தின அதிகாரம்! செய்யுந்துணிவும்!!
யாருங் கருதாரென்று இறுமாப்புடனே நின்று
ஹிந்திவைப்பீரானால் காங்கரஸ் மந்திரிசபை
போம்!!! (ஹிந்தி)

———

கண்ணிகள்.

ஆசைத்தமிழா!-நல்ல-அன்புத் தமிழா!
தேசநிலையைத் தெரிவாய்! தமிழா! (ஆசைத்)

நேசத்தமிழா!-வெள்ளை-நெஞ்சத் தமிழா
தாசநிலையைத் தகர்ப்பாய்! தமிழா! (ஆசைத்)

மாசுமனத்தார்!-சூழ்ச்சி-மனுவின் குலத்தார்
தேசப்பேர் சொல்லி செய்யும் மோசங்களைஙம்பார்!
(ஆசைத்)

"தேசபக்தர்க"-ளென்று-வேடம்புனைந்து
மோச ஜாதியார் செய்யுந் தேசத்ரோகம்பார்!
(ஆசைத்)

திலகர் நிதி!-செப்பும்-சி. ஆர். தாஸ் நிதி!
பலகதர் நிதி! பக ரரிஜன நிதி!

நல மறிந்திடாப்-பெண்கள்-நகைகளின் நிதி!
பல பலநிதி!-ஹிட்லர்-பட்டேலின் நிதி!

கூச்சமில்லாமல்-உப்பு-கொண்டு வாரதாய்!
ஆச்சாரி, ராஜன் சேர்த்த அறுபதாயிரம்!!

பேச்சுதானுண்டா?-இவைக்குப்-பேரேடு உண்டா?
போச்சுதே பணம்! கொள்ளை பேச்சுதே அப்பா!
(ஆசைத்)

பருத்தி நூல் தொண்டர்க்-கெல்லாம்-பரிய்ந்துதே!
பணம்!!
கருத்த தமிழன்! வயிறு காய்ந்ததே! அப்பா!

மருத்துவச்சி பார்-சுகள்-வாங்கிச் சிறையில்
விருந்துண்டிருந் தோர்! வீரத்யாகிகளாமே!!!
(ஆசைத்)

கொடியைப் பிடித்து!-ஜெய-கூச்சல்கள் போட்டு!
தடியடிபட்டு!!-சிறைத்-தண்ணீர் குடித்து!!!

மடிந்து போகவோ?-தமிழா!-மண்மேல்பிறந்தாய்!
இடிந்து சோராதே! வீர எண்ணங்கொண்டெழு!!!
(ஆசைத்)!

பன்னூறு ஆண்டாய்த்-தமிழைப்-பாழ்படுத்திய
அந்நியரிந்தி கொண்டு ஆளப்பார்க்கின்றார்!!
(ஆசைத்)

முன் சுயராஜ்யம்-வேண்டு-மென்று மொழிந்தோர்!
புன்மை ராமராஜ் யத்தைப்புகழ்ந்து பாடுறார்!!
(ஆசைத்)

தயையற்ற ராம-ராஜ்யத்-தன்மை யறியோமோ?
நயவாலி சம்புகனைக்கேள் ராமன் நீதியை!
(ஆசைத்)

மயங்க வேண்டாம்-சற்றுந்-தியங்க வேண்டாம்!!
மனுதர்மக் கொடுங்கோலரசு வேண்டவே வேண்
டாம்!!! (ஆசைத்)

(பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா எ. இ. பா)

வாழ்க! செந்தமி ழென்றொலி செய்யடா!
வாழ்க! செந்தமி ழென்றுரை கூறடா!!
வாழ்க! செந்தமி ழென்றுசங் கூதடா!!!
வாழ்க! செந்தமிழ் வையக மெங்குமே! (வாழ்க)

வாழ்க! பாண்டியர்! பெற்ற தமிழ் மொழி!
வாழ்க! சேரர் வளர்த்த தமிழ் மொழி!
வாழ்க! சோழர் புரக்குந் தமிழ் மொழி!
வாழ்க! வாழ்க தமிழ் மொழி வாழ்கவே! (வாழ்க)

இனிமை சேர்க்கும்! எழில் பெறச் செய்திடும்
இன்ப வாழ்க்கையி லேற்ற மளித்திடும்
கனி கற்கண்டு தே னென்னச் சுவை தருங்
காலங்கண்ட தமிழ்மொழி வாழ்கவே! (வாழ்க)

மனித வேற்றுமை சொல்லும் மனுநிலை
மறுத்தொதுக்குந் திருக்குறள் நல்கிடும்!
மனிதர் உயர்வு தாழ்வற்று மற்றுயிரொடு
மாண்புறத் தமிழ் மண்ணெலாம் வாழ்கவே!
(வாழ்க)

கண்ணகி மணிமேகலை கற்றது!
காவியங்க ளெனப்பல பெற்றது!
நுண்ணியதமி ழறிஞரு ழைப்பெலாம்!
நூல்களாய்க்கொண்டு ஞாலத் தொளிர்வது!!
(வாழ்க)

அண்ணல் நக்கீர ராண்மையைக் காத்தது!
ஆரியர், புத்தர், சமணர், கிறிஸ்தவர்,
வண்ண ஐரோப்பியர், மகம்மதியர்கள்!
வாழ்த்திடச்சுவை நல்கிய தமிழ் மொழி!! (வாழ்க)

அன்னை பாலொடு ஊட்டிய தமிழ்மொழி!
ஆயாள் கதைகள் புனைந்த தமிழ்மொழி!!
மன்னுந் தந்தை மகிழ்ந்த தமிழ்மொழி!!
மாசிலாப் பெரும் புலவர் தமிழ்மொழி!!! (வாழ்க)

இளமை காத்தது எங்கள் தமிழ்மொழி!
இன்பக் காதலி பேசுக் தமிழ்மொழி!
வளமை சேர்மறை மலையார் தமிழ்மொழி!!
மகிழுமாணிக்க நாயக்கர் தமிழ்மொழி!!! (வாழ்க)

சோர்வை நீக்கிடுந் தூயறிவீந்திடும்!
சுறுசுறுப்பொடு நன்மை பெருக்கிடும்!
பார்வைக்கே மூத்து! போன்று அணிதரும்!
பழந்தமிழ் மொழி! வாழ்க! எந்நாளுமே! (வாழ்க)

ஆர்வ மூட்டு மழகிய செந்தமிழ்!
ஆணை செய்யுமே லாருயிர் நல்குவோம்!!
யார்வரினுமிவ் வுலகெதிர் நிற்பினும்
யாது மஞ்சிடோம்!!! சூதுக் கிணங்கிடோம்!
(வாழ்க)

———

(ஏற்ற ராகத்தில் இசைத்துப் பாடுக)

வாழ்க தமிழர்கொள்கை வாழ்க! வாழ்கவே!
வீழ்க! மனுக்கொள்கை வீழ்க! வீழ்கவே! (வாழ்க)

சூழ்க! அறம், அன்பு, கடமை, எங்குமே!
ஆய தமிழர்! வீரம்! ஆண்மை! தோன்ற யாண்டுமே
ஆழ்க! அடிமை எண்ணம் ஆழ்க! மாய்கவே
அறிவிலாமை, தெளிவிலாமை மாய்க மாய்கவே! (வாழ்க)

மனிதர் தம்மில் உயர்வுதாழ்வு கற்பனைசெய்து
மற்றமக்கள் தங்களுக்கு அடிமை யாமென்று

புனிதமற்ற கொள்கை நூல்கள் புனைந்தெழுதியே
புளுகிப்பிழைக்கும் வஞ்சநெஞ்சர் பொன்ற பொன்றவே!
(வாழ்க)

மதப்பித்து சாதிப்பித்து மடிய மடியவே
மக்களை ஏமாற்றிப்பிழைக்குங் கூட்டமழியவே
கதை, கடவுள், மோட்சமென்று காசுபறித்திடும்
கலகக்காரர் செய்யுஞ்சூழ்ச்சி ஒழிய! ஒழியவே! (வாழ்க)

காந்திகதர், ராமராஜ்யம், அரிஜனமென்று
கல்வியற்ற மக்கள் கண்ணில் மண்ணைத்தூவியே
தாந்தம் வகுப்பு மாட்சிகொள்ளச் செய்யுந் தந்திரம்
தலையெடாது தொலைக! தறுகண் தமிழர் வாழ்கவே!!
(வாழ்க)

நாடெலாந் தமிழ் முழங்க நன்மையோங்கவே
நவநவத் தமிழ் நூல்கள் நாளுந்தோன்றவே
மேடெலாந் திருத்திப் பயிர் செய்து வாழ்கவே
வேதம் பூதமென்று ஏய்ப்போர் வீழ்க! வீழ்கவே!!
(வாழ்க)

அன்னையாகும் பெண்மை! உரிமையடைந்து வாழ்கவே!
அடிமைமடமை மூடத்தன்மை தொலைக! தொலைகவே!!
மன்னுந் தமிழரசு எங்கும் மலர்க மலர்கவே!
மானமுள்ள தமிழர் கூட்டம் பெருக! பெருகவே
(வாழ்க)

வித்வான் சி. எஸ். சிவம்

("வந்தே மாதரம் என்போம்" என்ற பாரதியார் பாடல் மெட்டு.)

ஹிந்தி மொழிநமக் கேனோ?—அது
இந்திய நாடெங்கும் பாய்ந்திடத் தேனோ?
முந்தியே ஆரியம் மாள—அதை
ஹிந்திப் புரட்டினால் எழுப்புறார் மீள.
(ஹிந்தி)

வேதம் புராணமுண் டென்பார்—கீதை
மேலாகக் கற்றிட லாமிதில் என்பார்
மேதினி மேலெல்லா வாழ்வும்—இன்ப
வீடுமே பெற்றுய்ய வழியிதே என்பார்.
(ஹிந்தி)

சாத்திரம் சமயங்கள் எல்லாம்—இங்குச்
சாதித்த தைக்கொஞ்சம் சாற்றுவீர் நீரே
கோத்திரம் குலம்சாதி எல்லாம்—பல
கோடிகள் ஆகிநாம் கொண்டது பேரே.
(ஹிந்தி)

ஒருவொழி யாலொன்று பாடு—நமக்
குண்டென் றுரைப்பவர் உறவே ஓர் கேடு
அருந் தமிழ் நாட்டினில் சாதி—பல
ஆயிர மாயிரம் சொல்லுமே நீதி. (ஹிந்தி)

ஒருமொழி யாலுல காண்டோர்—பூவில்
ஒருவரும் முன்னிலை யென் றுணர்வீரே

இராமன்கா லத்தைம்பத் தாறு—தேசம்
இருந்த தறியாதார் யாவரே கூறும்? (ஹிந்தி)

சாதிமதபேதத் தாலோ—அன்றி
தனிமொழி நமக்கொன்றில் லாமையினாலோ
எதிலர் கையகப் பட்டோம்—இதை
எண்ணி இயற்றிடின் இன்பத்துள் பட்டோம்.
(ஹிந்தி)

("வீர சுதந்தரம் வேண்டிநின்றார் பின்னர்" என்ற பாரதியார் பாடல் மெட்டு.)

சுதந்தரம் வேண்டியே வேட்கை கொண்டார் தங்கள்
சுதந்தரம் இழப்பாரோ?—என்றும்
இதந்தரும் மொழியிந்தி என்றுதாய் மொழிக்கொலைக்
கேவுதல் இழிவன்றோ?

ஆய்தமிழ் அந்நியர் ஆட்சியால் மாய்ந்திட
அயல்மொழிக் காக்கமேனோ?—சொந்தத்
தாய்பசித் தழுதிடத் தரணியோர்க் கறுசுவை
தாமிடல் அழகாமோ?

வயிற்றினில் கட்டிக்கு மண்டையில் பூசினால்
வந்தநோய் குணமாகுமோ?—வெறும்
கயிற்றினில் பாம்புபோல் கண்டொன்று மிரண்டிடில்
காரியம் நிறைவாமோ?

வேண்டிய செய்யாமல் வேறொன்று செய்திட்டால்
வீண்வம்பென் றேசாரோ?—சொந்தக்
காங்கரசால் பலன் கண்டிட எண்ணினோர்
கனவில் களித்தாரோ?

கும்மி.

ஹிந்தி ஹிந்தியென் றேகமாய்க் கூவினும்
ஏதும் அசையாதீர் தோழர்களே!—வட
விந்திய மால்வரைக் கப்பாலு மேறிய
மென்தமி ழையிது ஒத்திடுமோ?

பச்சைப்பயிர் மேயப் பட்டிமாடு வந்தால்
பார்த்திருப் பார்களோ பெண்களல்லார்—பெரும்
இச்சையால் ஹிந்தியை எங்கும் நுழைக்கிறார்
ஏமாறாமல் எதிர்த் தோட்டுவீர்.

அந்நியர் ஆண்டிட ஆடிக் குதிக்கின்றார்
ஆண்மையும் வீரமும் உள்ளோமென்று—நமக்
கந்திய பாஷையை உள்ளே நுழைக்கின்றார்
ஆகா இதேசுய ராஜ்யமென்று.

ஆரியம் வந்ததால் காரியம் கெட்டதை
ஆரே அறியாதார் தோழர்களே!—தமிழ்
வீரமும் ஆண்மையும் வெற்றிக் கொடைகளும்
வேரோடு வீழ்ந்தன ஒற்றுமையும்.

ஹிந்தியை இன்னே ஒழித்துவிட்டு உங்கள்
ஈடில்லா மானத்தைக் காத்திடுவீர்—இன்றேல்
பந்தயம் வைத்துப்பின் ஓடிடப் பார்க்கின்ற
பஞ்சைப்பத ராவீர் தோழர்களே!

கிளிக்கண்ணி.

பாங்கில்லாஜஸ்டிஸினால் பாரில்பயன் ஏதுமில்லை
பாருமெம் வீரமென்றே—கிளியே!
பசப்பி வாய்ப் பந்தல் போட்டார்.

ARTHUR HOPE POLYTECHNIC LIBRARY
1 APR 1945
COIMBATORE

காங்கர ஸாலேகுணம் கணக்கின் றிக் கொள்வோமென்று
ஈங்கு ஏமாந்து போனோம்—கிளியே!
இலவுநீ காத்ததுபோல்.

மந்திரிசபை ஏற்றதுவும் மாயவெடி ஹிந்திதன்னால்
இந்த்ரியம டங்கிப்போனோம்—கிளியே!
ஈரவெடிக் கஞ்சுவாய் போல்

வடநாட்டார் சொல்லுமொழி வாயினின் றுவிழுமுன்னே
இடமெல்லாம் பரப்பிடுவோர்—கிளியே!
இன்பமாய்நீ பேசுமாப் போல்.

எங்கும் அலைந்து பார்த்தேன் ஹிந்திமொழி ஏற்பார்
கங்குலே ஓட்டுமென்று—கிளியே! [இல்லை
காங்கரசுக் கோதிடுவாய்.

கருவூர் கண்ணன்.

("தேயிலைத் தோட்டத்திலே" என்ற மெட்டு.)

செந்தமிழ் நாட்டவரே—உங்கள்
சீரும் சிறப்பும் அழிந்திடவோ? ஒன்றும்
பந்தமிலாதவர் போல்—இன்னும்
பாவனை காட்டிப் பதுங்குகின்றீர் அந்தோ!
ஆண்மைக் கழகிதுவோ—தமிழ்
ஆதியர் வீரம் அழிந்ததுவோ? என்ன
பான்மை யறிகிலனே—இந்தப்
பாரினில் உங்களைப் போலொரு மாந்தரைக்
கண்டும் அறியேனே! — இதைக்
கண்டிட என் மனம் விண்டிடுதே ஐயோ! (செந்)

ஆரியப் பார்ப்பனர்கள்—நம்மை
ஆட்சி புரிந்திடச் சூழ்ச்சிகள் செய்கிறார்
காரிய மின்றியவர்—காங்கரஸ்
காங்கர சென்றுமே கத்தியலைவரோ?

வீரியமற்ற வர்கள்—உண்மை
வேடத்தில் வீம்புகள் பேசி எதிர்ப்பரோ?
கோரியதை முடிக்க—நம்மைக்
கொண்டே நம்மவரைக் கொன்று வருகிறார் (செந்)

நந்தமிழ்த் தாய்மொழியை—தமிழ்
நாகரீ கத்தை நசுக்கிட எண்ணியே
அந்தமிலாததுவும்—நமக்
கான கலைகள் இல்லாததுவு மொரு
"ஹிந்தி" எனும் மொழியை—தமக்
கிங்கு புகுத்திடக் கங்கணங் கட்டுறார்
சொந்த வடமொழிக் கும்—தம்மைச்
சூழ்ந்த இனத்தவர்க்கும் நன்மை தேடுறார் (செந்)

நாட்டு மொழியினிலே—இன்னும்
நன்கு படிக்க, எழுத, வகையின்றிக்
காட்டு மிராண்டிகளாய்—நம்மோர்
காலங் கழித்து வருகிறா ரந்தோ! அப்
பாட்டை நினைக்கையிலே—மனம்
பற்றியெரியுதே இற்று விழுகுதே
நாட்டமிதில் இலையோ?—இந்த
நாட்டினில் தாய்மொழி போற்றிடத் தொல்
லையோ? (செந்)

"இந்திய நாட்டினுக்கே—பொது
ஹிந்தி மொழி" யெனக்கூறி வகுப்பவர்
"இந்தியரெல்லோர்க்கும்—பொது
இந்து மத மொன்றே" என்று வகுப்பரோ?
சொந்தத் தொழில் களுக்குத்—தீமை
சூழ்ந்திடு மென்றல்லவோ அந்நியப் பொருள்
வந்திங்கு சேர்வதனை—நம்மோர்
வாங்கக் கூடாதென வாதுக்கு நிற்கிறார் (செந்)

எத்தனையோ கலைகள்—நம
தின்பத் தமிழில் இயற்றினோமில்லை ஈ
தொத்த பிற மொழியில்—உள்ள
ஒப்புயர் வற்ற கலைக ளனைத்தையும்
மெத்தத் தமிழினிலே—இங்கு
மேவிட நன்கு பெயர்த்திட வில்லை, தே
சத்தின் விடுதலைக்கு—வெறும்
சத்தமிடுபவர் பக்தியைப் பாருமின்! (சொ)

கே. எஸ். காசிலிங்கம்

(செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற மெட்டு)

ஹிந்தி மொழிக் கல்விக் கட்டாயம் தமிழனை
ஏமாற்றுஞ் சூழ்ச்சியே வேறன்று.

முந்திய செந்தமிழ் வாய்ந்திடும் நாட்டினில்
முன்வந்து நிற்கும் மொழியுளதோ—அந்தோ
ஹிந்தி மொழியதே சொந்த மெனச் சொல
எந்தத் தமிழன் மனங் கொதியான்? (ஹிந்தி)

தன்னந் தனிய தாய்த் தக்கோர் புகழ் வதாய்ச்
சங்கங்கள் போற்றி வளர்ந்த தாய்—இன்னும்
என்ன கொடுமைகள் ஆரியர் செய்யினும்
இணையன்றி வாழ்வது தமி ழன்றோ? (ஹிந்தி)

பாதியின் மேலுமிங் கேமக்கள் பேசுவர்
பாரிய ஹிந்தி மொழி யென்றே—வாது
சூதுகள் பேசிடும் ஆரியர் சூழ்ச்சிகள்
சுத்தத் தமிழ் மகன் கேட்பானோ? (ஹிந்தி)

சொந்த மொழியினுங் கட்டாயப் பாடமாய்த்
தொடங்க நும் வாய் சொன்னதிலை—மந்திரி
ஹிந்தி மொழியினைத் தமிழர்க்குக் கட்டாயம்
எப்படிப் செய்வது நியாயமாகும்? (ஹிந்தி)

பொதுமொழி யொன்றினால் வேற்றுமையுள
வெலாம்
பொன்றிடு மென்பர் ஆரியரே—புதுப்
பொதுமொழி யில்லாத நாட்டினில் மானிடர்
புகழுற வாழ்வது கண்டிலரோ? (ஹிந்தி)

பொதுமொழி தன்னாலே பகைமைகள் போயிடும்
பொன்றிடு மென்று பறை யடிப்பார்—அது
விதி யெனப் பெற்றிட்ட நாடெல்லாம் வேற்றுமை
வீழ்ந்திடல் சாய்ந்திடல் கண்டாரோ? (ஹிந்தி)

ஆங்கிலப் பாடமும் தமிழும் படிப்பதே
அல்லையுந் தொல்லையும் மாயிருக்கத்—தீங்கு
நீங்க இலாமலே ஹிந்தியைச் சிறுவர்கள்
நெற்றியில் வைத்துக் கட்டுவீரோ? (ஹிந்தி)

சுதந்தரம் சுதந்தரம் சுதந்தரமென்கின்றீர்
தூயதமிழுக் கதுவன்றோ—கிதம்
இதந்தரும் வாழ்விற் பிறமொழி பலாத்காரம்
எப்படிச் செய்வீர் மந்திரிகாள்? (ஹிந்தி)

அடிமை வாழ்வுகள் உளங் கொள்ளோம்
ஆரியர் சூழ்ச்சிக் குளங் கொள்ளோம்—கொடுமை
தரவரும் ஹிந்தி மொழிச் செபஞ் செல்லாமல்
தரணியில் நின்றிங்கு வென்றிடுவோம் (ஹிந்தி)

———

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,

———

(காமி சத்யபாமா கதவைத் திறவாய் என்ற மேட்டு)

பல்லவி

காமி ஹிந்தித் தாதி உன் காமம் ஒழிவாய்
ஒழிவாய், ஒழிவாய், ஒழிவாய் (காமி)

அநுபல்லவி

பூமி புகழும் மொழி
புனிதத் தமிழின் வழி
சேமிப் புதல்வன் நானடி
நானடி, நானடி, நானடி (காமி)

தேசத்துக் கொரு மொழி
திணிப்பது பெரும் பழி
நேசத்தைக் கொல்லுங் குழியே
குழியே, குழியே, குழியே (காமி)

பாலு வங் தூட்டி என்னை
பாது காத் திட்டவன்னை
போலுங் தமிழைப் போற்றுவேன்
போற்றுவேன், போற்றுவேன்,
போற்றுவேன் (காமி)

தாரகர்கள் கூறும் பொய்யும்
தையல் நீதானே செய்யும்
மையலும் என்னை ஏய்க்குமோ
ஏய்க்குமோ, ஏய்க்குமோ,
ஏய்க்குமோ (காமி)

பாலசுப் ரமணியம்
பாடித்தினம் பணியும்
சீலத் தமிழுக்குச் சேவை செய்
சேவை செய், சேவை செய்,
சேவைசெய் (காமி)

(செந்தூர் வேலாண்டி என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

ஹிந்தி மொழி வீழ்க—எங்கள்
இன்பத் தமிழ் வாழ்க (ஹிந்தி)

அனுபல்லவி.

சொந்த மொழியிருக்க சொத்தைமொழிபெருக்கும்
சூழ்ச்சி செயரசியல் மாட்சியில் கலமிலி
ஆட்சியும்பொடிபட வீழ்ச்சிசெய்திடுவமே (ஹிந்தி)

கையில் பல மிருக்கும் காரணத்தால் நெருக்கும்
கசடர்களது பலம் கடிதினிலதுவிடும்
விசன முறவுமவர் கசிவுறகலிகுவர் (ஹிந்தி)

வீர மில்லாத மொழி வீரர் சொல்லாத மொழி
விலையொருசிறிதுமில் வெகு சிறு மொழியிது
கலை மலி தமிழொடு சரியுற வருகுமோ (ஹிந்தி)

மா. சண்முகதாசன்.

(பாளைவாய்க்கமுகில் வந்து என்ற காவடிச்சிந்து மெட்டு)

செந்தமிழ் மணங்கமழ்மா
சந்ததியாகும் உரிமை
சீர்பெறுங்தோழர்காளொன்று சேருங்கள் சர்க்கார்
செய்யும் பழியென்னவென்று பாருங்கள்

ஆதிமுதலாகத் தமிழ்
ஓதியுலகோர் மதிக்க
ஆண்டனுபவித்த மொழி ஆழுமா இனி
ஆரியர் சூழ்ச்சிப்புவியில் வாழுமா

குட்டக் குட்டத் தலைகுனியும்
மட்டி நாமென்றே தமிழைக்
கொலை புரிவோர்க் கிடமளித்தல் கூடுமா சிங்கக்
குட்டி யானைகட்கு அஞ்சி ஓடுமா

ஆரியர் கூத்தாடினாலும்
காரியக் கண்ணாயிருக்க
ஆன்றோர் சொன்னதாப்தமொழி ஆகுமே அதை
அலட்சியம் செய்தால் மகிமை ஏகுமே

சீவனற் றொழிந்த பாஷைக்
கே கண்டாவிழ்தம் அளிக்கச்
செய்கின்றார் தந்திரம்முதன் மந்திரி சேலம்
சி.ராஜகோபாலாச்சார்ய் தந்திரி

அன்னை மொழிக் கின்னல்செய்யும்
அன்னவர்க் குடனிருந்து
ஆதரிக்கும் நம்மவரும் ஆண்களா அன்றி
அழியும் வெள்ளரிக்கனியின் பூண்களா

மாதாவின் வழிதெரிய
வாழ்வரோ மக்கள் உலகில்
மானம் வெட்கம் கெட்ட ஜீவன் எதுக்கு உடன்
மார்பு தட்டியே எழுவோம் வாதுக்கு

இனத்தவருக் கிதம்புரிய
மனத்தகத் துறுதிகொண்டு
இத்தகைய எத்தனத்தை ஏற்பதா உயர்
முத்தமிழ்ப்ரியர்கள் விட்டுப்பார்ப்பதா

ஆசை வார்த்தைக்காகமதி
மோசமாய்த் தமிழுணர்வின்
அற்புதக் கலைமறைதல் அடுக்குமா உண்மை
யாக மனசாட்சி யிடம் கொடுக்குமா

மண்டலம் புகழ் இராஜ
மன்னையம்பதியின் வாச
மானா சண்முகதாசன்றன் வாசகம் போது
மான தருமே யிவ்வித சூசகம்

இளவலூர் மறைமணி.

(காலக் கோடுமையே என்ற மேட்டு.)

நாட்டினில் பார்ப்பனர் கூட்டமாயானதால்
வேட்டவிதமெல்லாம் செய்தார்
வேட்ட விதங்களைச் சட்டமாயும் இனி
வேண்டுமட்டும் செய்து கொள்வார்.

செந்தமிழ் நாட்டினில் வந்தநாள் தொட்டவர்
சேர்ந்த அரசரைக் கொண்டே,
நந்தமிழ் மக்களை வாட்டிச் செயம்கொண்ட
ஞாயம் அறிந்திலிர் போலும்.

இந்தநாளும் அவர் பண்டதைப் போலவே
ஏய்த்தே தேசப் பெயராலே.
மந்திரி ஆனதும் ஹிந்தி தந்தாரினி
மாட்டுவர் தந்திரத்தாலே.

ஆதியில் இன்னமும் ஆரியத்தைத் தமிழ்
அன்னைக் கெதிர் பெறச் செய்தார்
நீதிகள் யாவுமே அம் மொழியில் உண்டு
நேருதிர் என்றுரை செய்தார்.

"தெய்வம் பயின்றது தெய்வம் புகன்றது
தெய்வங்கள் ஆக்கினதாலே
வையகத்தீர் இவ் வடமொழி தன்னையே
வளர்த்திட வேண்டுவதாமே.

மந்திரம் வேதங்கள் என்பன ஆதிய
மட்டின்றி உள்ளதினாலே.
சொந்ததமிழ் மொழியின் உயர்வாமிது
சொர்க்கம்வை குந்தமும் ஈமே.''

அன்றிப் படிக்கெலாம் சொன்னதைக் கேட்டே
[நாம்

ஆழ்ந்தோம் அடிமையின் மீதே,
இன்றதைப் போலவே ஹிந்தி மொழிதனை
ஈந்தனர் காண்பீர் அவ்வாதே.

ஆதரத்தால் காந்தி அல்லாகு அக்பரென்
றார்த்தே நிதநிதம் வந்தே
மாதரம் கூறிய பார்ப்பனர் ஹிந்தியை
மாட்டினர் செந்தமிழ் நொந்தே.

மக்கள் சுதந்தரமாய் கைவலையினால்
மாதாவையே தெறல் ஆமோ?
தக்கதுவோ நம் தமிழ் மொழி வைத்துமோர்
தகவில் மொழி கொளல் தாமே.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிடும்
காட்சியைப் போலவும் விட்டில்,
உண்ணும் பழமெனத் தீயினில் வீழ்வதும்
ஒப்பதாம் ஹிந்தியைக் கற்றல்.

ஆரியத்தைப் படிப்பீரெனிற் சூழ்ச்சி
அனைத்தும் வெளிப்படு மென்றே,
கோரியே ஹிந்தியாம் ஆரியப் பிள்ளையைக்
கொள்ளுதிர் என்கிறார் இன்றே.

ஹிந்தியைக் கட்டாய பாடமாய் ஆக்கவே
எண்ணுறார் பார்ப்பனர் தாமே,
நந்தமிழ் தன்னிலும் எந்தவகை அது
நன்மைதரும் மொழி ஆமே.

இரண்டு மொழியினுக்கே புறந் தந்த
இளைஞருக் கிந்தி தந்தாலே,
வறண்டே அனைவரும் முட்டாளாய் வால்கொள்ள
வைத்தனர் பார்ப்பாரிப்பாலே.

தேசியத் தக்தடி மைதனைப் போக்குதல்
தெள்ளறிவீர் ஹிந்தி என்றால்
ஆசையின் கூறதோ? ஆட்சி பெற்றோமென்ற
அய்யர்களின் திமிராமோ?

எங்கள் தமிழினால் இல்லாச் சுதந்தரம்
ஈயுமோ ஹிந்தி என்றாலே,
பொங்குறார் தேசீயமாம் பசுத் தோலையே
போர்த்தித் திரிகின்ற பார்ப்பார்.

ஆச்சாரியார் இப்போதாரியம் வேண்டுமென்
றார்ப் பரிக்கின்றனர் பேச்சில்
ஆச்சரியம் நம்மார் எய்திடவே தங்கள்
ஆட்சிக்குள் ஈவரோர் வீச்சில்

ஆதலினால் இனிமேல் தமிழ் மக்களே!
ஆரியச் சூழ்ச்சியாம் கன்றை,
காதல் ஒழித்துப் பின்வாள்கொண்டறுத்திடும்
காலத்திற்கேவிடல் நன்றோ?

கொஞ்சம் தமிழர் முன்னேறு மிக்காலத்தில்
கூடியே பார்ப்பனர் யாரும்,
வஞ்சத்தால் ஹிந்தி வளர்த்திட நிற்கிறார்
வண் தமிழீர் அது தீரும்.

வித்துவான் எ. எம். குழந்தை.

(பாதுகையே பாதுமையே என்ற மெட்டு)

உறங்கலாமோ, உறங்கலாமோ
ஊமராய்த் தமிழன்னை ஏமுற்றிரங்கல்கண்டும் (உற)

கறுந்தமிழ்க் கொலை செய்ய காசகாலப்பார்ப்பனர்
கயவஞ்சகம்புரிந்து நலனைக் குலைத்தல்கண்டும் (உற)

அனுமார் விபீஷணராம் தமிழர்கள் தமைக்கொண்டே
அருந்தமிழ் வீரர்களை அடிமையாக் கிடப்பண்டே
மனுதர்ம ஆட்சியை நிலைநாட்டிடவுட் கொண்டே
மர்மமாய் ஹிந்தியை வலிந்து புகுத்தல் கண்டும் (உற)

மஞ்சள்பெட்டி நிறைத்த மடத்தனந்தன்னை யொட்டி
வாய்வட்டறிவிலிகள் எனப் பெரும்பட்டங்கட்டி
பஞ்சாங்கப்பார்ப்பனர் பழம்பகையினைச்சுட்டி
பரிகாசமாகச்செய்யும் பாழும் ஆட்சியைக் கண்டும்(உற)

பொதுமொழியெனும் பெரும் போர்வையதனைப்
[போர்த்து
புனருத்தாரணமாக வடமொழி யதைக்கோர்த்து

இதமுடன் ஹிந்தியென் றொருபெயர் தனைச்சேர்த்து
ஏய்க்கப்பார்க்கும் பார்ப்பனர் சாக்குப்போக்கினைக்
கண்டும் (உற)

அறிவற்ற தமிழர்கள் அனைவரு மெதிர்த்தாலும்
அதுமட்டும் இனிச்செய்யத்தவறிடேனொருக் காலும்
மறியல் செய்தாலும்விடேன் எடுத்ததை என நாளும்
மதங்கொண்டாச்சாரியார் கதங்கொண்டுரைத்தல்
கண்டும் (உற)

தோழர் பாரதிதாஸன்.

(கண்ணிகள்)

கட்டாயம் ஹிந்திதனைக் கற்பதென ராஜாங்கச்
சட்ட மியற்றுவதில் சம்மதமோ என் தமிழா!

கன்னல் தமிழ்க்கல்வி கட்டாய மாக்காமல்
இன்னல் தரும் ஹிந்திதனை எண்ணுவதோ என்
[தமிழா

தாய்க்குச் சலுகையின்றித் தாழ்கின்றாள்! ஹிந்தியெனும்
பேய்க்கு நறுநெய்பால் பெய்க என்றார் என் தமிழா!

உறவிட்ட பார்ப்பனர்கள் "ஹிந்தி" என ஊளையிட்டும்
பிறவிக் குணங்காட்டும் பெற்றியுணர் என் தமிழா!

"தமிழழியு மானால் தமிழர் அழிவர்"—இதை
நமைவிழுங்க வந்தவர்கள் நன்கறிவார் என் தமிழா!

தம்மவர்கள் நன்மைக்கே தக்கதென்றால் ஹிந்திதனை,
நம்மவர்கள் அன்னவர்கால் நக்குகின்றார் என் தமிழா !

உடல் காக்கச் சோறில்லை என்னுங்கால் நம் பகைவர்
கடல் காட்டி வீழ் என்று கூத்துகின்றார் என் தமிழா!

தென்றற் பொதியமலைச் செந்தமிழ்க்கு மீதியாய்
நின்ற உயிர் ஹிந்தி வந்தால் நீங்கிவிடும் என் தமிழா !

மொகலாயர் வந்து முடி பூண்டும் தம் மொழிதான்
சகலர்க்கும் சட்டமென்று சாற்றவில்லை என் தமிழா !

தாய் மொழிக்கு நேரெதிர்ப்பாய்த் தம் மொழியை
[வற்புறுத்தும்
பேய்களை நாம் கண்டதில்லை பேருலகில் என் தமிழா !

அன்று தமிழ் நூல் அழித்தார்கள்; ஆரியர்கள்
இன்று தமிழ் வேரறுக்க எண்ணிவிட்டார் என் தமிழா!

ஓரிதனைச் சோளவயல் உட்சேர்த்தாப் போலிங்கே
ஆரியரைச் சேர்த்த அவதியிது என் தமிழா !

காய்ச்சலுறு நாட்டிற் கனித்தமிழே யல்லாது
மூச்சுறுத்தும் ஹிந்திவர முடியாதே என் தமிழா!

தேளுக் கதிகாரம் சேர்ந்து விட்டால் தன் கொடுக்கால்
வேளைக்கு வேளை விளையாடும் என் தமிழா!

இயற்கைத் தமிழ் மொழியை ஈடழிப்பதோ ஹிந்திச்
செயற்கை மொழி உன் நாக்கைத் தீண்டுவதோ
[என் தமிழா!

உய்யும் தொழிற் கல்வி உள்ளதுவா ஹிந்தியிலே
துய்ய கலைக்கதிலே சொந்தமுண்டா என் தமிழா!

நாட்டுரிமை நாட்ட நடுமொழியாய் ஹிந்திதனை
நாட்டிவிட்டால் அவ்வுரிமை நாடிடுமோ என் தமிழா!

சீனர் ஒரு மொழியே சேர்ந்தும் சுவாதீன
ஈனர்களாய் இன்றிருக்க இல்லையா என் தமிழா!

பல பாஷை ரஷ்யர்களின் பச்சை விடுதலையை
உலகோர் வியப்பதுணராயோ என் தமிழா!

நிலவடையும் தண்தமிழை நீக்குவதோ? ஹிந்திக்
கலவடையை மாட்டிக் கதறுவதோ என் தமிழா!

ஹிந்தியிலே வீரம் இருக்குதெனும் ஈனர்களின்
புந்தியிலே பொய்யே புழுத்ததுவோ என் தமிழா!

ஹிந்திக் கருத்துக்கள் இங்குண்டு; செந்தமிழின்
கந்த மெலாம் ஹிந்தியிலே காட்டச் சொல் என் தமிழா!

ஹிந்திதனைப் புகுத்தி ஏற்படுத்தும் நல்லுரிமை
பந்தியிலே வேறான பார்ப்பனர்க்காம் என் தமிழா !

நல்லுரிமை தேடும் நரிகள் முகமொன்றே
சொல்லும் அவர் எண்ணும் சூழ்ச்சிகளை என் தமிழா!

பார்ப்பனர்க்கே ஹிந்தி வரும் பச்சைத் தமிழரெல்லாம்
சீர்ப்படுதல் எவ்வாறு செப்பிடுவாய் என் தமிழா!

பள்ளியிலே தேர்ச்சியுறும் பத்திலொரு தமிழன்
தெள்ளெனவே ஹிந்திவரின் தேறான்காண் என் தமிழா!

சாதி யொழித்துச் சமயப் பித்தம் தொலைத்தால்
மீதி யிருத்தல் விடுதலைதான் என் தமிழா!

பேதம் வளர்க்குமொரு பீடையினை ஹிந்தியென்றால்
ஏதும் தவறில்லை என்றறிவாய் என் தமிழா!

பொதுப்பாஷை வேண்டாம் புன்மை மடமையெனும்
மதிப்பழக்கம் தீர்த்தால் வரும் உரிமை என் தமிழா!

எல்லாரும் சோதரர்கள் என்ற பெருநோக்கம்
எல்லார்க்கும் ஏற்பட்டால் இன்பமடா என் தமிழா!

பால் சுந்தர ராஜ்.

(சஞ்சலம் தீர்ந்தின்பமுற வேண்புறாவே என்ற மெட்டு.)

ஆதி முதல் ஜோதியான - தமிழ்த்தாயே
கல்வி-அரசியாய் வாழுகின்ற - தமிழ்த்தாயே

நீதிநெறி யூட்டுகின்ற - தமிழ்த்தாயே
லோக-நிபுணரெல்லாம் புகழும் - தமிழ்த்தாயே

ஆங்கிலரும் வாழ்த்து கின்றார் - தமிழ்த்தாயே
உன்னை-ஆரியர்கள் தாழ்த்துகின்றார்-தமிழ்த்தாயே.

தமிழரின் கற்புநிலை - தமிழ்த்தாயே
மிக-தாழ்ந்ததென்றார் அய்யங்கார் - தமிழ்த்தாயே

பார்ப்பனரின் தலைவர் - தமிழ்த்தாயே
ஒரு-பக்கா ஆச்சாரியாராம் - தமிழ்த்தாயே

பார்ப்பனரைப் பாதுகாக்க - தமிழ்த்தாயே
பல-பாதகம் செய்கின்றாராம் - தமிழ்த்தாயே

செத்த சமஸ்கிருதத்துக்கு - தமிழ்த்தாயே
கவிச்-செல்வமே நீயிரையா - தமிழ்த்தாயே

கல்வி கற்று கஷ்டப்பட்டோம் - தமிழ்த்தாயே
ஹிந்தி-கட்டாயமானால் மீளோம் - தமிழ்த்தாயே

ஹிந்தி படிப்பதிலே - தமிழ்த்தாயே
ஏதோ-மர்மமுண்டம்மா - தமிழ்த்தாயே.

பொது பாஷை என்று சொன்னால் - தமிழ்த்தாயே
பிற-மாகாணங்களிலேன் இல்லை - தமிழ்த்தாயே

ஹிந்தி கற்ற பார்ப்பனருக்கு - தமிழ்த்தாயே
வேலை-ஈந்திடும் சூழ்ச்சியிது - தமிழ்த்தாயே.

கோடி ஏழுமக்கள் பெற்ற - தமிழ்த்தாயே
உன்னை-கொலை செய்ய போறாரம்மா - தமிழ்த்தாயே

ஏமாந்த சோணகிரிகள் - தமிழ்த்தாயே
பலர்-இருக்கின்றார்கள் நமக்குள்ளே - தமிழ்த்தாயே

பார்ப்பனத் தாசர்களாய் - தமிழ்த்தாயே
பல-பைத்தியங்க ளிருக்கம்மா - தமிழ்த்தாயே

புத்தி கெட்ட பித்தருக்கு - தமிழ்த்தாயே
நீ-சுத்தமதி யூட்டிடுவாய் - தமிழ்த்தாயே

ஹிந்தியை வீழ்த்திடுவோம் - தமிழ்த்தாயே
உன்னை-ஏற்றியே வாழ்த்திடுவோம் - தமிழ்த்தாயே

பென்னாகரம் வி. எஸ். நடேசன்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் என்ற மெட்டு.)

ஆபத்து வந்துதையோ தமிழருக்கு
ஆபத்து வந்துதையோ
தாபத்துடனதை விலக்க
தமிழரே முன்வருவீர்.

தீபத்தின் நல்லொளிபோல் சுடர் விட்டு
தென்னாடெங்கும் ஜொலித்த
ரூபத்தை மாற்றிடவே ஆச்சாரியார்
ரோஷமுடன் துணிந்தார்.

ஹிந்தி எனுங்கத்தியால் தமிழன்னை
ஹிருதயம் தன்னைக்குத்த
தந்திரமாகவே தான் காங்கரசின்
தலைவரும் எண்ணங்கொண்டார்.

தாங்கொண்ணா கல்விச்சுமை மாணவர்கள்
தலையை நெருக்கல் கண்டும்
ஈங்கது போதாதென்றே ஹிந்தி தன்னை
ஏற்றுகிறார் பெருஞ்சுமையாய்.

ஆங்கிலக் கல்வியினால் தமிழ் மொழி
அலங்கோலமான தென்றே
ஏங்கி இருக்கும்போது ஹிந்தி வந்தால்
என்னே தமிழின் கதி?

பார்ப்பனரல்லாத மாணவர்கள்
பரீக்ஷையில் தேறாத

மார்க்கமிது வெனவே உண்மைகண்ட
மக்கள் புலம்புகின்றார்.

மனுவின் காலத்திலே தமிழர்கள்
மறைகற்கக் கூடாதென்ற
தனி நலம் வேற்றுருவாய் இந்நாளில்
தலைவிரித்தாடு தந்தோ.

பன்னெடுங் கால முதல் ஹிந்தியை
படித்திடாக் காரணத்தால்
என்ன குறைகள் வந்து தமிழர்க்கு
இடைஞ்சல் விளைவித்ததோ.

ஹிந்தி படிப்பதினால் ஒற்றுமை
ஏற்படும் என்றறைந்தால்
ஹிந்தி படித்தோர்க்குள்ளே வேற்றுமை
இருந்திடக் காரணமேன்?

தாய்மொழிக் காதரவு வேண்டுமென்றே
தலைவர் பலரும் சொல்ல
பேய்மொழி கற்பீரென்றே கட்டாயம் செய்
பித்தலாட்ட மென்னவோ.

வறுமை யொழிந்திடுமோ யந்ரம் செய்யும்
வகையை அளித்திடுமோ
சிறுமை களில்லாமலே நம்மவர்க்கு
சீவனம் காட்டிடுமோ.

எந்த விதத்திலுமே தமிழர் முன்
னேறிடக் கூடாதென்றே
சொந்த நலத்தை கொண்டோர் செய்துவரும்
சூழ்ச்சிதனை யொழிப்பீர்.

சுத்தமல்லி
அ. சிதம்பரநாத பாவலர்

(இராகம்:- நாத நாமக்கிரியை தாளம்:- ஆதி)

(இசை:- ஆனந்தக்களிப்பு)

எங்கள் தமிழ் மொழி என்போம்! அதற்கு
இன்னல் இழைப்போர் எதிரிகள் என்போம்!! (எ)

கன்னல் இளந்தமிழ் அன்னை! சிந்துங்
கண்ணீர் துடைக்காத சேயர்கள் பின்னை
என்னத்திற் கிங்குய்தல் வேண்டும்? பிறர்
ஏளனத்திற்கோ! இலக்காதல் வேண்டும்? (எ)

இன்பத் தமிட்சுவை இன்றி, இங்கு
எங்குந் "தமிழர்கள்" எத்தனை? கண்டீர்!
துன்பந்தரும் "ஹிந்தி" ஏனோ? இதைச்
சொல்லப்புகின் தேசத்துரோகி யாவனோ? (எ)

தேசாபிமானஞ் செய்வோரே! பிற
தேயத்தார் வாழ்விற்குத் தீங்கிழைப்போரே!!
பாஷாபிமானத்தைக் கொல்லல், பெரும்
பாதகமென் றுணராததுமேனோ? (எ)

வீரத்தமிழன்னை வீழின்! அவள்
வீழ்ச்சி புரட்சியுண்டாக்காமற்போகா!!
கோரச்செயல் வெறுப்போர்கள், இந்தக்
கொள்கைபுகுத்த விரும்பிடமாட்டார். (எ)

எளிதன்றோ தாய்மொழி பயிலல்? அதன்
இன்பத்தை ஊட்டாமல் ஹிந்தி புகுத்தல்
தெளிவான "அறிவுடையோர்கள்" செய்யும்
செயலாகா! துட்டர்தம் செய்கையேயாகும். (எ)

இதந்தரும் மொழி கொல்லலாமோ? இதில்
ஏற்படுங் கசப்பினி லகுவாகப் போமோ?
சுதந்தர வேட்கையினோர்கள் இந்தத்
தொல்லை இழைக்கத் துணிந்திடலாமோ? (எ)

பொது மொழியெனக்கூறல் வீணே ஹிந்தி
பிறதேயத் தோடுறவாடுதற் காமோ?
புது உலகுக்கிவை ஆகா அதிற்
போக்கிடு நேரம் உபர்ந்தனவாகா. (எ)

இனிய செந்தமிழ்மொழி வீழ்தல் ஹிந்தி
எனுமொரு வடமொழி எதிர்ப்பின்றி வாழ்தல்
அநியாய மிவையன்றோ? தமிழா! உன்
ஆண்மையும் ரோஷமும் அழிந்ததோ? தமிழா!
(எ)

ARTHUR HOPE POLYTECHNIC LIBRARY
1 APR 1945
COIMBATORE

ஒரு தமிழன்.

(பொன்விளைந்த பூமி என்னும் இந்தியாவே என்ற மெட்டு.)

கலைக்கடாய்த் திகழ்ந்து நிற்கும்—தமிழர் வாழ்வே—ஹிந்தி
கற்க நீ முற்பட்டதென்ன தமிழர் வாழ்வே.

இலக்கியச் செல்வம் நிறைந்த—தமிழர் வாழ்வே-போலி
ஹிந்தி மோகம் கொண்ட தென்ன —தமிழர் வாழ்வே

இலக்கணத்தின் வரம்புகண்ட தமிழர் வாழ்வே—தனக்
கெழுத்திலாத மொழிக்கவாவேன் தமிழர் வாழ்வே

மூத்தமிழ்ச் சங்கமிருந்த—தமிழர் வாழ்வே—ஹிந்தி
மோகங்கொண்டு நிற்பதென்ன—தமிழர் வாழ்வே.

சித்திரக் கவித்துவங்கொள்—தமிழர் வாழ்வே—பர
தேச மொழிக் காசையேனோ—தமிழர் வாழ்வே.

நாற்கவிப் புலவர்கள் சூழும்—தமிழர் வாழ்வே—தீய
நச்சு மொழிக் காசை யென்ன—தமிழர் வாழ்வே.

ஐந்திலக்கணம் நிறைந்த—தமிழர் வாழ்வே—எழுத்
தரிய ஹிந்திக் காசை யென்ன—தமிழர் வாழ்வே.

அகம் புறப்பொருள் பயின்ற—தமிழர் வாழ்வே—பொருள்
அற்ற ஹிந்திக் காசை யென்ன—தமிழர் வாழ்வே.

பொருள் நிறைந்த கவி பயின்ற—தமிழர் வாழ்வே—
ஹிந்திப்
போலிக் காசை கொண்ட தென்ன—தமிழர் வாழ்வே.

இனிய பாப்பா வினம் பயின்ற—தமிழர் வாழ்வே—பாட்
டிலாத ஹிந்திக் காசை யென்ன—தமிழர் வாழ்வே.

இனிய தமிழ்ச் சுவை நுகர்ந்த—தமிழர் வாழ்வே—ஹிந்தி
என்னும் எட்டிக்காய் நுகர்வேன்? தமிழர் வாழ்வே

எட்டுத் தொகைப் பொருள் தெரிந்த—தமிழர் வாழ்வே—
ஹிந்தி
எதற்கு கற்க முற்பட்டாய் நீ—தமிழர் வாழ்வே.

பத்துப் பாட்டின் வளமை கண்ட—தமிழர் வாழ்வே—ஹிந்தி
படிக்க நீ முற்பட்ட தென்ன—தமிழர் வாழ்வே.

பதினெண்கீழ்க் கணக்கறிந்த—தமிழர்வாழ்வே-ஹிந்தி
பயின்றுநீதி காண்பதென்ன—தமிழர்வாழ்வே

ஐம்பெருங்காப்பி யம்பயின்ற—தமிழர் வாழ்வே—ஹிந்தி
ஆசையுனக்கானதென்ன தமிழர்வாழ்வே

பாரத்தொல்காப் பியம்பயின்ற—தமிழர்வாழ்வே—ஹிந்தி
படித்தறிவ தென்னசொல்லு—தமிழர் வாழ்வே

காரிகை நன்னூல்படித்த—தமிழர்வாழ்வே—ஹிந்தி
கற்றுநீ தெரிவதென்ன—தமிழர்வாழ்வே

வள்ளுவர்மெய்த் தமிழறிந்த—தமிழர்வாழ்வே—ஹிந்தி
மயக்கங்கொண்டு திரிவதென்ன—தமிழர்வாழ்வே

கம்பன்கவிச் சுவைநுகர்ந்த—தமிழர்வாழ்வே—இராமன்
கதைக்கு மோகம் கொண்டதென்ன-தமிழர்வாழ்வே

நீதிநூ லெண்ணில்பயின்ற—தமிழர்வாழ்வே—அ
நீதிமனுக் காசையென்ன—தமிழர்வாழ்வே

தாய்மொழியைப் புறக்கணித்து—தமிழர்வாழ்வே—பகைவர்
தம்மொழிக் கவாவுவதேன்—தமிழர்வாழ்வே

தனித்தியங்கும் தமிழ்பயிலும்—தமிழர்வாழ்வே-ஹிந்திச்
சார்புமொழிக் காசையென்ன—தமிழர்வாழ்வே

ஆதியற்ற மொழிபயிலும்—தமிழர்வாழ்வே—நானூ
றாண்டுமொழிக் காசையென்ன்—தமிழர்வாழ்வே

தொண்ணூற்றாறு பிரபந்தங்கற்ற—தமிழர்வாழ்வே—
கூட்டுத்
தொகுப்புமொழிக் காசையென்ன—தமிழர்வாழ்வே

தாயிரங்கப் பிறனைவேண்டல்—தமிழர்வாழ்வே—இது
தர்மமோ யோசித்துப்பாரு—தமிழர்வாழ்வே
(தமிழர்வாழ்வு-தாய்நாடு)

கடம்பங்குளம் ப. நாராயணன்.

(வீரத் திருவிழிப்பார்வையும் என்ற மெட்டு)

தமிழை மறந்திடலாமோ-பெற்ற
தாயின் பக்தியின்றிப் போகுமோ - உங்கள்
அமிழ்தினுமினிய தமிழ் மொழி - இன்று
ஆவிகுறைந்திடல் ஞாயமோ - நெல்
உமியை எடுத்து அரிசியை - நாம்
உதறிவிட லழகாகுமோ - இத்
தமியேன் உரைக்குஞ் சிறுமொழி - தமிழ்
தாய்மொழி போல நீர் கொள்ளுவீர்.

சட்டசபை சென்ற தோழர்காள்! - நீங்கள்
தாய்கழுத் தறுக்கவோ சென்றது? - பல
பட்டந்துறந்த பெரியவர் - பெரும்
பதவி வெறுத்த தியாகிகள் - நேர்
சட்டந் தெரிந்த நிபுணர்கள் - உயர்
தன்மதிப்பைக் காக்கும றிஞர்கள் - எல்லாம்
பட்டப்பகல் கொள்ளைப் பார்ப்பனர்கள் - தானை
பற்றிப் பிடிப்பது மென்கொலோ?

ஆயிரமுண்டு நமக்குள்ளே - அந்த
ஆரியர் தாளைப் பணிவதோ - சபை
போய்ப் பயனென்ன தோழரே - வெறும்
பொம்மையாய் புத்தாய்க் கைப்பிள்ளையாய் - நீங்
ஆயிடு வீரென்றெண்ணிலோம் - கொஞ்சம் [கள்
ஆண்மையிருக்கு மென்றெண்ணினோம் - தமிழ்
சேய்கள் தலையினில் ஹிந்தியைக் - கட்டி
சேர்த்து வைப்பது நியாயமோ?

மஞ்சள் பெட்டியை நோவதா - எங்கள்
மடமைகொள் மக்களை நோவதா - நீங்கள்
அஞ்சிடேல் சுயராஜ்யத்தை - வாங்கி
அளிப்பேனென்பவரை நோவதா - கொடும்
பஞ்சத்திற் காத்திடுங் காங்கரஸ் - எனும்
பாமர மக்களை நோவதா - இன்று
கொஞ்சமுங் அறிவின்றிப் பார்ப்பனர் - பின்னே
கும்பிட்டுத்திரிவோரை நோவதா

காந்தி பைத்தியம் மக்களை - இங்கு
கட்டிப் பிடித்ததை நோவதா - உயர்
ஆந்திரர் தம்மையே நோவதா - இந்த
அடிமைத் தமிழரை நோவதா - நாம்
சாந்தி பெறவிங்கு ஆட்சிசெய் - நம்
சர்க்கார் தம்மையே நோவதா - இன்று
பேந்த விழித்துத்தமிழ் மக்களும் - வீணே
பேசாதிருப்பதை நோவதா?

(ஆனந்தக் களிப்பு மெட்டு)

அன்பும் அறிவுமுடைய - என
    தாருயிர்மக்காள் அறியீரோ செய்தி
இன்புற யாவரும்புகழ - நான்
    எங்கும் பிரக்யாதியாயிருந்தது மறிவீர்

அன்றொரு நாளெக்தன் வாழ்வில் - பாதி
    ஆங்கிலமாது வந்தெடுத்துமே கொண்டாள்
அன்று முதலின்றுவரையும் - நான்
    ஆன துணையின்றி அரையுயிரானேன்.

எஞ்சியவுயிரோடு நானும் - என்
    இளவல்களோடு இருக்குமிந்நாளில்
தஞ்சமென்றெனை வந்து அண்டி - நான்
    தஞ்சங்கொடுத் தென்தயவினில்வளர்ந்தோர்.

கொஞ்சமும் நன்றியில்லாது - என்
    குழந்தைகளையிவர் கொடுமையாய் நடத்தி
மிஞ்சிய அறிவை மயக்கி - மோக்ஷ
    மீய்குவேனென்று பறித்துயிர் வாழ்ந்தார்.

மக்களை நாட்டிடை பிரித்து - ஈனம்
    மானமின்றியவர் பெரியவரென்றார்
தக்கதலைமகன் ஒருவன் - இவரைத்
    தாங்கிடும் பீடத்தைத் தகர்த்திட ஏங்கி

தேசியம் எனும் போர்வை கொண்டு - என்
    செல்வர்களை யேய்த்து மந்திரியாகி
மாசுறு மிந்தியைக் கொண்டு - நம்
    மாபெறும் நாட்டினில் வலுவுடன் புகுத்த.

எண்ணின ணெண்ணத்தைப்பாரும் - என
தின்னுயிர் மக்களுமிவருடன் கூடி
கண்ணிருந்தும் இல்லாதவர்போல் - நல்ல
காதிருந்துஞ் செவிடாகினாய்யோ.

நூற்றுக்கு மூன்று பேருள்ள - இந்த
நூலவர் தலைவருள் நாலுக்கு மூன்று
ஆத்திரமேனில்லை தமிழா - இந்த
அடிமை மந்திரி பத்துக்கைந்து பேரவரே.

இன்றென் செய்யப் போகின்றீர் மக்காள் - எனக்
கிருக்குமிடரினை யெடுத்தெறி வீரோ
அன்றியவருடன் கூடி - என்னை
ஆழக்குழி தோண்டிப்புதைத்திடு வீரோ

சொல்லிடுவீர் நீங்கள் ஒன்றாய் - இதில்
சோம்பாதெனக் குயிர் அளித்திடவெண்ணி
அல்லும் பகலுமுழைப்பீர் - இன்று
அசட்டை செய்தால் நீங்கள் யாவருமழிவீர்.

தமிழன்.

(அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்)

ஆதியில ப்பாவத்தால் அந்தணரென்னுந் தீயோர்
சாதியி லேற்றத்தாழ்வு சாற்றியே 'மா' மனு உவின்
நீதி யென்றுரைத்த நீதி நெறியினை நினைந்து நின்றார்
ஈதிலோர் வியப்புமில்லை இருந்தவரிடங் கொடுத்தார்

சூத்திரரென்னும் பட்டஞ் சூடவே சூழ்ந்தபோழ்து
ஆத்திரமில்லா மக்கள் அதனையும் விரும்பிபேசற்
சூத்திரரென்று தம்மைச் சொல்லியே வதற்குத்தக்க
பாத்திரராகி நின்றார் படுபழி பார்க்கலாதார்.

மேலு தங்குலத் துளோரே மேன்மையுற்றோங்கிவாழ
காலுமா மறைகளென்றார் நம்மனோர் அவற்றையேயெக்
காலுமே காணாவண்ணம் கபடங்கள் கண்டுவிண்டார்
சாலுமே யவர்கள் சூழ்ச்சி தனக்கிவை சான்றதாக.

கஞ்சளாம் பெட்டிதன்னுள் மாண்டநும்குடவோலையை
எஞ்சிடாதிடுவீராகில் இயற்றுவோம் நன்மையென்று
கெஞ்சியகாலம் போகக் கேடுகள் பலவு நேர்ந்தார்
மிஞ்சிடாதவர்களெண்ணம் மேவன செய்தல் வேண்டும்.

ஹிந்தியேயிந்தியாவினொற்றுமைக் கேற்றதென்றார்
தந்திரம் மிகவும் வல்லதாகரே யவர்கள் பாடை
உய்ந்திட வகையுட்கொண்டு உயர்ந்தது தமிழே யாகில்
நந்திடாததுவே யென்று நயம் பல நவிலுவாராய்.

மறைகளக்காலம் வல்லார் அரசியல் மறைகளாற்றின்
குறையுறத் தமிழன்காணக் கொள்ளுமோ வுள்ளமந்தோ
முறையிலா நூலோராளு முறைமைதானிதுவே
[கொல்லோ
இறை யவனீந்ததாகில் இழுக்குறல் காணுவேரமோ.

அங்கியன் கால்பிடித்த அநுமன்மெய் வீடணாதி
என்னுமிவ்விழிந்தோர்போல எண்ணியே நம்மைக்
[கொண்டே

உன்னிய முடிக்கலுற்று உலைவைத்தார் தமிழினுக்கே
'கன்னிப்பெண்' தமிழேயாகிற் காத்தல்நங் கடமை
[யன்றோ.

ஆதலார் வீரர்வம்மின்! ஆரியர் புரியுஞ் சூழ்ச்சி
பாதலம் படுக்கும்வண்ணம் பரிகரம் பலவும் பாரீர்!
வீதலும் வேண்டற்பாற்றே விரிதமி ழுரிமையாலே
ஈதலாலுறுதியில்லை எழுமினோ தமிழரெல்லாம்!

பொத்தனூர்சோ.அ.மணிவாசகம்.

(ஏற்றவாறு இசைத்து பாடுக)

வீரத் தமிழர்கள் ஒன்றுகூடுவோம்
வேதத் தமிழொலி எங்குஞ்செய்வோம்
தீரச் செயல்பல செய்திடுவோம்
தெய்வப் புலவர்களைப் போற்றிடுவோம்
கோரப் பிரிவுகளை ஒழித்திடுவோம்
கொடியோர் செய்சூழ்ச்சிகளை அழித்திடுவோம்
வீரத் தமிழ்வேந்தர் விளங்கிய சீர்
வெற்றித் தமிழ் நாட்டை நமதென்போம்

தாயை மறந்த பெரும்பாவத்தால்
தாழ்வுகள் வந்ததென்று நாமுணர்ந்தோம்
சேய்கள் நாம் சேர்ந்தே அவளடியை
சேவிக்க இதுசமயம் சேர்வோம வாரீர்

வீயாக புகழுடைய நந்தாய் தான்
மேனாளில் மாற்றாரைச் சிதைத்தாள்என்றும்
தேயாத செந்தமிழாம் நந்தாயை
சிறுமையுறச் செய்வாரைச் சிதறடிப்போம்

ஈன்று புறந்தந்த அன்னைக்கு
இல்லாத அணியெலாம் பூட்மயே
அன்று போலவளாட்சி செய்திடவே
அமைக்க வலியின்றிப் பேரறமாம்
நன்றி யழிப்பதுதான் நியாயமோ?
நாட்டுப் பற்றென்பதும் இதுதானோ?
கொன்று தான் தாயினை மாற்றாட்கு
கும்பிடு போடலாமோ சொல்வீரே

மாசே நிறைமனத்தார் ஒன்றுகூடி
மாதா மனம் நோகச் செய்கிறாரே
நாசப் பருவத்திற்கறிகுறியே
நாட்டில் பிறமொழி கட்டாயம்
பாசப் பழிமுதல் வளர்ப்பதன்றோ
பள்ளியில் அயன்மொழி வற்புறுத்தல்
தேசப் பணிஎன்ப திதுதானோ
தெய்வீக அன்னையைச் சிதைக்கலாமோ?

நாடு உயர்வதுந் தாய்மொழியால்
நலங்கள் பெருகுவதும் தாய்மொழியால்
பீடு நிறைசெல்வம் தாய்மொழியால்
பிறங்கும் செந்நெறி தாய்மொழியால்
வீடுபெறுவதுந் தாய்மொழியால் - எனும்
வேதப்பொருளினையே கைக்கொண்டோம்
தேடும் பொருள்களெலாம் அவளளிப்பாள்
செல்வி அவளடியைப் பணிவோமே.

இளவலூர் மறைமணி.

(அச்சமில்லை அச்சமில்லை என்ற மெட்டு)

வஞ்சமான ஆட்சியால் நம்
வாழ்வறுக்க எண்ணியே
பஞ்சையான ஹிந்திகொண்டு
தமிழொடுக்கப் பார்த்தும் நாம்,
நெஞ்சிலுள்ள வீரமே
நெகிழ்ந்துவிட்ட போதினும்
அஞ்சலில்லை, அஞ்சலில்லை,
அஞ்சலென்பதில்லையே.

காலமுண்டு, நேரமுண்டு
கையுமுண்டு மெய்யினில்
வீரமுண்டு தீரமுண்டு
வீறுமுண்டு மார்பினில்,
சேரவுண்டு தோழர்கள்
செகத்தின்மீது என்னிலே
பாரிலெங்கள் தமிழொடுக்கப்
பாழுமிந்தி சூழ்வதோ?

கண்களுண்டு பூமி மீது
காட்சி செய்யத் தமிழிலே
அன்பருண்டு ஆதரிக்க,
ஆண்களுண்டு போர்செயப்

பெண்களுண்டு உறுதி கூறப்
பீடுகொண்ட பாச்செயப்
பண்களுண்டு என்னில் இந்தப்
பாழுமிந்தி சூழ்வதோ?

ஓண்டவந்த தாம்பிடாரி
ஊர்ப்பிடாரி தன்னையே,
"சென்று மீள்க" என்று சொன்ன
செய்தி கேட்டதில்லையோ
பெண்டிர்காள்! நற்றோழர்காள்!
பிறங்கு நங்கள் தமிழினை
அண்டிவந்த தாதி வீழ்த்த
அன்பர் பார்த்தும் நிற்பதோ?

வாரமொன்றிற் சனியனென்னும்
வைகலொன்று தானன்றி,
கூறுமற்றை ஆறுநாளும்
கோளில் அச்சனிப் பெயர்
சாருமோ இவ்வுவமை யைச்
சகத்தின் மீது கொண்டு நாம்
ஆர்வமோடு காலம் நோக்கி
ஆர்த்தல் வேண்டும் வேண்டுமே.

தாராபுரம்

நா. ஆறுமுகம் பிள்ளை.

ARTHUR HOPE POLYTECHNIC LIBRARY
1 APR 1945
COIMBATORE

(கும்மி)

மீனுருவும் புலி தன்னுருவும் - விஜைதி
வீரத் தனுவுரு வுந்திகழும்
தேனின் சுவையுடன் ஞானக்கலை - கொண்ட
செந்தமிழ்த் தாயின் மணிக்கொடியே.

மக்கள் முதல் முதல் தோன்றியது - பண்டு
மாகடல் கொண்ட குமரியெனும்
மிக்க புகழ்த்திரு நாட்டினிலே - வீறின்
மேவியது செந் தமிழ்க்கொடியே.

வேறு பல்பல நாட்டவரும் - கானில்
வெவ்விலங் கென்னத் திரிந்தவந்நாள்
பேறு தருமுயர் நாகரிகம் - முற்றும்
பெற்றதும் எங்கள் தமிழ்க்கொடியே.

விண்ணின் உயரும் இமயவரை - முடி
மேலும் விளங்கித் திகழ்ந்ததுவே
எண்ணில் பலபெரும் நாடுகளும் - பணிந்
தேத்தும் தமிழன்னை யின்கொடியே.

G. D. NAIDU,
U. M. S. COIMBATORE.

வெற்றிப் படைஞரின் கைகளிலும் - மன்னர்
மேவும் மணித்தேர்க் கொடிஞ்சியிலும்
உற்றபல் வாணிபச் சாலையிலும் - மேலே
ஓங்கித் திகழும் தமிழ்க் கொடியே.

மாடங்கள் மேல்நின்று தான்விளங்கும் - கலை
வாணர்கள் சங்கத்தின் மேல்விளங்கும்
காடெங்கும் மாண்புட னேவிளங்கும் - எங்கள்
நற்றமிழ்த் தாயின் பொலன் கொடியே.

நீலக் கடல்மிளந் தோடுகிற - கப்பல்
நெற்றியின் மீமிசை நின்றிலங்கி
ஞாலத்தி லேபல தீவிலும்போய் - இசை
நாட்டியது பைந் தமிழ்க் கொடியே.

“சித்தர்கள் முத்தர்கள் ஞானியர்கள் - உண்மைத்
தெய்வக் கவிஞர்கள்” யாவர்களும்
சித்த மகிழ்வுட னேபுனைந்து - பாடும்
சீர்கொண்ட தோங்குந் தமிழ்க் கொடியே.

ஹிந்தி மொழியெண்ணம் நீங்கிடவே - இந்நா
டின்பத்தி லேதிளைத் தோங்கிடவே
“செந்தமிழ்த் தாய்பதம் பாடுவமே - அவள்
தெய்வக்” கொடிபிடித் தாடுவமே.

“இந்திரன்” பொன்னுலக கத்தினிலும் - உயர்
ஏற்ற முடன்சென்று வீற்றதுதான்
செந்தமிழ்த் தாயின் மணிக்கொடியே - அதைச்
சேவித்துப் போற்றி வணங்குவமே.

G. D. NAIDU,
U. M. S. COIMBATORE.

உதயேந்திரம் எஸ். எஸ். சிந்துராஜி.

ARTHUR HOPE ... COIMBATORE
1 APR 1945

கண்ணிகள்.

("மெய்ஞ்ஞானத் தங்கமெட்டு")

சுஞ்ஞான தங்கம் சுஜாதி தங்கம்
விஞ்ஞான தங்கமெல்லாம் ஞானத்தங்கமே
வீழ்ச்சியுறக் காலமடி ஞானத்தங்கமே.

நூற்றிலே மூவரான நுண்ணறிவில்லாரீன
கூற்றிலும் கொடியவரின் ஞானத்தங்கமே
குயுக்தி யென்னசொல்வேன் ஞானத்தங்கமே.

ரசிக்க முடியா ஹிந்தி ராமனைப் புகழும் ஹிந்தி
உசிதமில்லாப் பாஷையை ஞானத்தங்கமே
உயிர்பிக்கிறார் பாரடி ஞானத்தங்கமே.

கம்பன் புகழேந்தி காளமேகமம்பிகாபதி
கும்பமுனி ஒட்டக் கூத்தன் ஞானத்தங்கமே
தேம் வள்ளிச் சட்டமுனி ஞானத்தங்கமே.

ஔவை கபிலன் அந்தகவீரராகவன்
செல்வை வள்ளவனதிமான் ஞானத்தங்கமே
குடந்தை படிக்காசனும் ஞானத்தங்கமே.

பல்பட்ட சொக்கநாதன் பாண்டிய வீரமுனிவன்
நலமுறும் பொய்யாமொழி ஞானத்தங்கமே
நக்கீரன் தொல்காப்பியனும் ஞானத்தங்கமே.

பன்னரும் பவனந்தி பதினெண்ணர் வச்சணந்தி
கன்னரும் நாலடியார் ஞானத்தங்கமே
கனிசுவை நற்றமிழை ஞானத்தங்கமே.

1 APR 1945
COIMBATORE

கட்டாய மாக்கிடாமல் கண்ணிமையைக்
[காத்திடாமல்
இட்டதே சட்டமென ஞானத்தங்கமே
ஹிந்திறைப் பரப்புறாரடி ஞானத்தங்கமே.

தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும்
[வாய்மணக்கும்
நட்டாலும் விளைந்திடுமே ஞானத்தங்கமே
நற்றமிழின் நளினமடி ஞானத்தங்கமே.

படித்தால் மன நாசம் பார்த்தாலே கண்கூசும்
பிடித்தாலும் கைநாறுமே ஞானத்தங்கமே
பிசகான ஹிந்தியடி ஞானத்தங்கமே

வீரத்தமிழர்க்கே வீணாடம்பர மெதற்கே
சாரத்தமிழ் மொழிக்கே ஞானத்தங்கமே
சள்ளை வந்து சூழ்ந்ததடி ஞானத்தங்கமே

தமிழர்க்கேது ரத்தம் சலந்தானவர்க்கே மொத்தம்
அமிழ் தினுமினிய மொழி ஞானத்தங்கமே
அழிந்திட பார்க்கலாமோ ஞானத்தங்கமே

பண்டிதர் புலவரென்றும் பண்ணவர் வித்வானென்
எண்டிசை யுள்ளாரடி ஞானத்தங்கமே [றும்
எள்முனை யபிமானமில்லை ஞானத்தங்கமே

பேருக்குச் சான்றோரடி பெற்றதாயை மறந்தாரடி
போருக்கு நுழைவோமடி ஞானத்தங்கமே
போனாலுயிர் வாழ்வோமடி ஞானத்தங்கமே

மாதா மனமெரிய வாழ்க்கையுண்டோயறிய
சூதான ஹிந்தியடி ஞானத்தங்கமே
சுட்டெரிப்போமடி ஞானத்தங்கமே

———

முற்றிற்று.

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.